செ.வெ.எண்: 510/2019 நாள்: 09.10.2019

## சிறுபான்மையினரின் பாதுகாப்பு கேடயமாக முதலமைச்சர் திகழ்கிறார் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பேட்டி...

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், இன்று (09.10.2019) பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் திரு. டி. ஜான் மகேந்திரன் அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் ஆய்வு மற்றும் கருத்துக் கேட்புக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் செயலர் முனைவர் எஸ். சுரேஷ்குமார், இ.ஆ.ப., துணைத் தலைவர் திரு. ஜவகர் அலி, உறுப்பினர்கள் திரு. எஸ். ஜெ. ஜெபமாலை இருதயராஜ், திரு. வி.டி.எஸ்.கவுதம்குமார் சேத்தியா, முனைவர். அஜித்பிரசாத் ஜெயின், முனைவர். ஜி. கோவிந்தராஜ்வர்தனன், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. பொ. இரத்தினசாமி, உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. ஆனந்த் குமார், இ.ஆ.ப., மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் செல்வி. லாவண்யா, துணை ஆட்சியர் (பயிற்சி) செல்வி. மந்தாகினி, அரசு அலுவலர்கள், சிறுபான்மையினர் சமுதாயத்தை சார்ந்த தலைவர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் ‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோரின் ஆணைக்கிணங்க தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் சார்பாக இன்று சிறுபான்மையின மக்களின் பல்வேறு கோரிக்கைகள், விண்ணப்பங்கள் குறித்து ஆட்சியர் மற்றும் அரசு அலுவலர்களுடன் ஆய்வு செய்யப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டத்தில் நடைபெறும் ஆய்வு மற்றும் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் சிறுபான்மையின மக்கள் அதிகளவில் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். மேலும், கூட்டத்தில் தமிழக அரசின் சிறுபான்மையினர் மக்களுக்கான திட்டங்கள், நிவாரணங்கள் குறித்தும் விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதில் மாவட்டம் சார்ந்த கோரிக்கைளுக்கு ஆட்சியர், அரசு அலுவலர்கள் பதில் அளித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு கேடயமாக திகழ்கிறார். இந்தியாவில் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக சிறுபான்மையினர் மகிழ்ச்சியாக வாழும் மாநிலமாக தமிழகம் திகழ்கிறது. இன்று நடைபெற்ற கூட்டம் அரசு திட்டங்கள் குறித்து சிறுபான்மையினரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பயனுள்ள கூட்டமாக இருந்தது. மத்திய, மாநில அரசு திட்டங்கள் மற்றும் புதிய கோரிக்கைள் குறித்து சிறுபான்மையினர் ஆணையம் மூலமாக உரிய கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும். திருவண்ணாமலையில் நடைபெற்ற ஆய்வு மற்றும் கருத்துக் கேட்புக் கூட்டம் சிறுபான்மையினருக்கு மிகவும் பயனுள்ள வகையில் அமைந்துள்ளது’ என்றார்.

இதனை தொடர்ந்து, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பாக 17 பயனாளிகளுக்கு ரூ.93,500/- மதிப்பிலான முதியோர் ஓய்வூதியம், இலவச தையல் இயந்திரம் மற்றும் கல்வி உதவிக் தொகை தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டது. மேலும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம், சோமாசிப்பாடி கிராமத்தை சேர்ந்த சாராள் என்பவர் மனு மீது மாவட்ட ஆட்சியர் மூலம் உடனடி நடவடிக்கை மேற்கொண்டு இலவச தையல் இயந்திரம் வழங்கினார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**